## தேசிய கல்வி நிறுவகம் - 2017

தேசிய கல்வி நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமை கூற்று, உரிய மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 01**

கடந்த 09 ஆண்டுகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 72,188,213 தொகையான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ரூபா 8,889,405 தொகையான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 81,077,618 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன் செலவுகள் உரிய காலப்பகுதியில் இனங்காணப்படாமையால் 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் நிலைமாறாத் தன்மை மற்றும் ஒப்பீட்டுத் தன்மை காணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02**

காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தனதாக்கல் ரூபா 46,089,932 தொகை எனினும் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 24,421,416 தொகையாக காணப்பட்டமையால் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 21,668,516 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதனம் மாற்றங்களில் ஏனைய நடைமுறை சொத்துக்கள் அதிகரித்தல் என ரூபா 114,177 தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் அவ்வாறான சொத்தொன்று காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் போது குறுகிய கால வைப்புக்கள் ரூபா 54,227,194 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(iv) காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களில் அட்டுறு செலவுகள் அதிகரித்தல் ரூபா 37,467,998 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(v) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு தொழிற்பாடுகளின் கீழ் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள் விற்பனவு நட்டம் ரூபா 1,299,765 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 47 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்து ஒன்றின் நியாயமான பெறுமதி அதனது தாங்கக் கூடிய பெறுமதியில் இருந்து பொருண்மையாக மாற்றமடையும் போது அந்த சொத்தை மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும் ரூபா 1,175,975,418 தொகை பெறுமதியான நிறுவனத்தின் சொத்துக்கள் 2008 ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09**

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு கிரயம் மற்றும் நிகர தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும் ஏடுகளின் படி இருப்பு மீதி ரூபா 24,498,345 தொகை என விற்பனை விலைக்கு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருந்த ரூபா 50,000,000 தொகையினை செலவு ஒன்றென கணக்கீடு செய்திருந்தமையினால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் மீதி மற்றும் மிகை அப்பெறுமதியில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மானியம் ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 169,000 பெறுமதியான அலுவலக உபகரணங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த பணிக்கொடை செலவுகள் ரூபா 5,547,436 தொகையான பணிக்கொடை ஒதுக்கக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக பணிக்கொடை செலவுக் கணக்கிற்கு வரவு வைத்திருந்தமையினால் அப்பெறுமதியினால் மீளாய்வாண்டிற்கான மிகை குறைவாகவும் பணிக்கொடை ஒதுக்கக் கணக்கின் மீதி மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்திருந்த ரூபா 6,418,346 இற்கான திறைசேரி உண்டியல் வட்டி மீண்டும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய திறைசேரி வட்டி ஒன்றென கணக்கீடு செய்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மிகை மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானம் அப்பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்த வேண்டிய ரூபா 2,344,710 இற்கான செலவுகள் மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 26,656,147 தொகை பராமரிப்பு செலவுகள் எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2016 ஆண்டின் போது மீபே தெற்காசிய ஆசிரிய பயிற்சி நிலையம் நிர்மாணிப்பதற்கான செலவுகள் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருந்த போதிலும் அந்த கட்டிடத்திற்காக செலுத்த் வேண்டிய் மதியுரை கட்டணம் ரூபா

603,235 தொகை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் மூலதனப்படுத்தாமல் நடைபெறு வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மீதிகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த மீதிகளிடையே ரூபா 37,957,303 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 04 கணக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதி மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 58,341,508 இற்கான விளக்கமளிக்கப்படாத வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பாடநெறிக் கட்டண முற்கொடுப்பனவு என ரூபா 73,609,665 இற்கான எதிர்வு கூறிய பெறுமதியொன்று கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அம்மீதியை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) கூட்டுப்பெறுமதி ரூபா 514,112,042 தொகைக்கான கட்டிடங்கள், கணினிகளும் துணைப் பாகங்களும், நிழற் பிரதி இயந்திரம், நூலகப் புத்தகங்கள், தளபாட உபகரணங்கள் ஆகிய சொத்துக்களில் அந்த சொத்துக்களை கொள்வனவு செய்த திகதிகள் குறிப்பிட்டிருக்காமையால் அச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு கணித்தல் தொடர்பாக பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) 05 நடைமுறைக் கணக்குகள் தொடர்பான பெறுவனவு மற்றும் கொடுப்பனவு காசேடுகள் வெவ்வேறாக பேணப்பட்டிருந்ததுடன் பெறுவனவு காசேடுகளில் மாதத்திற்கான மொத்த பெறுவனவுகளின் கூட்டுத்தொகை மற்றும் கொடுப்பனவு காசேடுகளின் நாளாந்த காசு மீதியை பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த போதிலும் மாத இறுதியில் மீதியை பெற முடியாது என அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தில் காணப்படும் கணினி முறைமையின் மூலம் ஆரம்ப காசு மீதிக்கு மாதாந்த பெறுவனவுகளை கூட்டி மாதாந்த கொடுப்பனவை கழித்து மாதாந்தம் இறுதி மீதியினை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் இதன் காரணமாக வருட இறுதியில் ஒவ்வொரு கணக்குகளிலும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 468,696,829 இற்கான காசு மீதியொன்று காணப்பட்ட போதிலும் காசேட்டு மீதியுடன் இந்த மீதியை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### 2.2.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆண்டிற்கான பாடசாலை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வினாத்தாள் அச்சிடுதல் தொடர்பாக கல்வி அமைச்சில் இருந்து பெறவேண்டிய ரூபா 3,237,800 தொகை 2008 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 05 வருட காலத்தை மிகைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 1,574,603 இற்கான செலுத்த வேண்டிய வைப்புக்களை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பலவின கடன்பட்டோர் மீதியிலுள்ள பல வருட காலமாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 393,500 இற்கான மீதியை நடைமுறை ஆண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது நடாத்தப்பட்ட செயலமர்வுகள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களில் ரூபா 5,027,588 தொகையும் போக்குவரத்து மற்றும் ஏனைய முற்பணங்கள் ரூபா 4,072,955 தொகை மற்றும் 05 வருடங்களை கடந்துள்ள ரூபா 60,431 இற்கான பொது முற்பணமும் மீளாய்வாண்டு இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2016 திசெம்பர் 22 திகதிய 2004/பிச/1(2016 திருத்திய) தேசிய நூலக மற்றும் ஆவண ஆக்கல் சேவை சபையின் சுற்றறிக்கை பிரிவு 3.1 | நூலகப் புத்தகங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் 2015 நவம்பர் 07 திகதி முதல் 2016 மே 12 திகதி வரை நூலகத்தினால் நடாத்தியிருந்த நூலகப் புத்தக கணிப்பீட்டின் பிரகாரம், அகற்றப்பட வேண்டிய 11,642 புத்தகங்கள் இனங்கண்டிருந்த போதிலும் அப்புத்தகங்களை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | ரூபா 1,00,000 பெறுமதியை விட மிகையாக முற்பணம் வழங்கும் போது திறைசேரியின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற வேண்டும். எனினும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றிருக்காமல் ரூபா 2,661,303 தொகை முற்பணமாக வழங்கியிருந்ததுடன் ஒரு முற்பணம் தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் முற்பணம் வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 716(2) | பண்டங்கள் கொள்வனவு செய்யும் போது வழங்குவதில் நம்பிக்கை தன்மை மற்றும் விரைவாக வழங்கி ஒப்படைக்கும் இயலுமை ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் 2017 மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை கட்டளைகள் அனுப்பப்பட்ட ரூபா 3,888,687 தொகை பெறுமதியான 21 பண்டங்க்ள கணக்காய்வுத் திகதி வரையும் நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) நிதிப் பிரமாணங்கள் 705(5) | ஒப்பந்த வேலைகளை புறக்கணிகத்தவர்களின் பெயர்களை உட்படுத்தி வழங்குனர்களின் கறைநிரள் பதிவேடு ஒன்று நிறவனத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2015 மே 25 திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக் கையின் பந்தி 3.5 | உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கியிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் போக்குவரத்து படி பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களினால் தேக்க அல்லது வேறேதும் அலுவலக வாகனம் ஒன்றினை பயன்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை. ஆனால் நிறுவனத்தின் போக்குவரத்து படி பெற்றுக்கொள்ளும் பெண் உத்தியோகத்தர் ஒருவர் 11 சந்தர்ப்பங்களில் வாகனத்தை பயன்படுத்தி இருந்ததுடன் அதற்காக ரூபா 135,345 இற்கான எரிபொருள் கிரயமொன்று நிறுவனத்தினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 82,516,985 இற்கான மிகையொன்றாகக் காணப்பட்டதுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 37,792,759 இற்கான மிகையொன்று காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 44,724,226 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவுகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 279,066,913 இனால் அதிகரித்திருந்த போதிலும் வைப்புக்கள் வருமானம் ரூபா 115,131,191 இனால் மற்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா 182,522,154 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சியை முக்கியமாக தாக்கியிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 36,496,150 தொகை காணப்பட்ட மிகை 2015 ஆண்டின் போது ரூபா 157,631,150 தொகை வரை அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆ்ணடின் போது ரூபா 37,792,759 தொகை வரை குறைந்து இருந்ததுடன் மீண்டும் மீளாய்வாண்டின் போது ரூபா 82,516,985 தொகை வரை வளர்ச்சி அடைந்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனங்கள் மற்றும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 257,724,220 தொகையான நிறுவனத்தின் பங்களிப்பு 2015 வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 464,705,488 தொகை வரை அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆண்டின் போது ரூபா 371,685,653 தொகை வரை குறைந்திருந்ததுடன் மீண்டும் மீளாய்வாண்டின் போது ரூபா 404,042,670 தொகை வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிறுவனத்தின் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பாக கவனம் செலுத்தும் போது கடந்த ஆண்டின் போது 4.7.1 ஆக காணப்பட்ட நடைமுறை விகிதம் மீளாய்வாண்டின் போது 3.7:1 தொகையாகக் காணப்பட்ட விரைவு சொத்து விகிதம் கடந்த ஆண்டின் 4.3:1 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது 3.5:1 தொகையாக காணப்பட்டது. நடைமுறை சொத்துக்கள் 88 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்துவது திறைசேரி பிணைமுறி மற்றும் வங்கி நடைமுறை கணக்கு மீதிகளாக காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் நிறுவனத்தின் பாரிய அளவு சொத்துக்கள் திரவச் சொத்துக்களில் அடங்கியிருந்தன. நிறுவனத்திற்கு சொந்தமான 05 வங்கி கணக்குகளில் ஒன்றில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 298 மில்லியனுக்கான மீதியொன்று காணப்பட்டதுடன், தேவையை மிகைத்து காசு மீதிகளை வைத்திருத்தலும் குறுகிய கால முதலீடு செய்தல் ரூபா 36 மில்லியன் இற்கான மீதியொன்று காணப்படுதல் ஆகிய காரணங்களினால் நடைமுறை மற்றும் விரைவு விகிதம் உயர்ந்த பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்தது.

## 3.3 நிறுவனத்தினால் மற்றும் நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்ட சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடன்படிக்கைகளை மீறியதன் காரணமாக கல்வி அலுவல்களுக்காக வெளிநாடு சென்றிருந்த 03 உத்தியோகத்தர்களுக்கு எதிராக கூட்டுத்தொகை ரூபா 4,481,538 இற்கான நட்டஈடு கோரி நிறுவனத்தினால் மாவட்ட நீதிமன்றத்தில் 03 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ஆசிரிய பயிற்சி சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று மற்றும் ஊழியர் பணிக்கொடை தொகைக்கு வாழ்க்கைச் செலவு படி உட்படுத்தி செலுத்தாமை தொடர்பாக 10 ஊழியர்களினால் ரூபா 927,091 இற்கான நட்டஈட்டு தொகையொன்று கேட்டு நீதிமன்றங்கள் 11 வழக்குகள் தாக்கல் செய்திருந்ததுடன் பணிக்கொடை கொடுப்பனவுகள் செலுத்துவது தொடர்பான வழக்குகள் நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகம் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் கல்வி அபிவிருத்திக்காக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், கல்வி முறைமைகளில் செயலாற்றுகை, குறிக்கோள்கள் கட்டமைப்பு மற்றும் பாட எண்ணிக்கை உட்பட கல்வி முறைமை தொடர்பாக மற்றும் கல்வி சமூகம் சார், பொருளாதார மற்றும் ஏனைய பிரிவுகள் தொடர்பாக ஆய்வுகள் நடாத்திச் செல்லல், கல்வி முறைமையில் ஈடுபட்டுள்ள பதவியணியினரின் தொழில்சார் மற்றும் முகாமைத்துவ திறன்களை முன்னேற்றுதல் பட்டப் பின்படிப்பு கல்வியினை வழங்குதல் ஆகியன நிறுவகத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

மீளாய்வாண்டு தொடர்பாக மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளல் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த திட்டம் உரிய முறையில் செயற்படுத்தி இருக்காததுடன் அது ஒட்டு மொத்த இலங்கையை சார்ந்த மாணவ பிள்ளைகளின் கற்றல் செயற்பாடு தொடர்பாக நேரடியாக தாக்கக்கூடியதாக இருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) 49 அறிவு மற்றும் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் கல்வித் துறையில் தொழிலறிஞர்கள் 22,725 போன்ற பயிற்றுவிப்பதற்காக திடப்பட்டிருந்த போதிலும் 15,743 பேர்கள் மாத்திரம் பயிற்றப்பட்டிருந்தனர்.

(ii) 10 திணைக்களங்களின் மூலம் 48 பாடங்களுக்காக ஆசிரியர் வழிகாட்டல் கைநூல் தயாரிப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் 29 விடயங்கள் தொடர்பாக அக் கைநூல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 30 பாடங்கள் தொடர்பான வளபங்களிப்பு புத்தகங்கள் தயாரித்து பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 25 பாடங்கள் தொடர்பாக திட்டமிட்டிருந்தவாறு அப் புத்தகங்கள் தயாரித்து பூர்த்தி செய்திருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 2013 அக்தோபர் 09 ஆந் திகதிய 257 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்கு மேலதிகமான உழைக்கும் உழைப்பு அவர்களின் வருடாந்த அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதத்தை அதிகரிக்கக் கூடாது. எனினும் அந்த சுற்றறிக்கைக்கு முரணாக 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை சம்பளத்தில் 50 சதவீதத்தை அதிகரிக்கக் கூடாது. எனினும் அந்த சுற்றறிக்கைக்கு முரணாக 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை சம்பளத்தில் 50 சதவீதத்தை மிகைத்து உத்தியோகத்தர்கள் 48 பேருக்கு ரூபா 4,501,586 தொகை மேலதிக உழைப்பு என மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 2018 ஏப்ரல் வரை அந்த மிகை கொடுப்பனவை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்**

பாடத்திட்டங்கள் தயாரித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

**(i) விஞ்ஞான பாடம் - தரம் 6-11**

தரம் 6,10 இற்காக 2015 ஆண்டின் போதும் தரம் 7,11 இற்காக 2016 ஆண்டின் போதும் தரம் 8,12 இற்காக 2017 ஆண்டின் போதும் மற்றும் தரம் 9,13 இற்காக 2018 ஆம் ஆண்டின் போதும் ஆக விஞ்ஞான பாடங்களுக்காக பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த பாடவிதானங்களை புத்தாக்கஞ் செய்வதற்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டிய கருமங்கள் நிறைவேற்றப்பட்டு அவற்றை பாடவிதானங்களுக்கு புத்தாக்கஞ் செய்வதற்கு அடிப்படையாக கொண்டிருந்தது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ii) உயர்தரம் தரம் 12,13 இற்கான இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் உயிரியல் பாடத் திட்டங்கள்**

2012-2020 பாட விதானங்களை செயற்படுத்தும் திட்டத்தின் பிரகாரம் மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக புதிய பாடத்திட்டம் 12 மற்றும் 13 தரங்களுக்கு முறையே 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது செயற்படுத்த வேண்டி இருந்தது. அதன் பிரகாரம், அந்த பாடத்திட்டம் முறையே 2016 திசெம்பர் 15 மற்றும் 2016 நவம்பர் 08 திகதி நிருவாக சபையினால் மற்றும் கலைத்திட்ட சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அனுமதிகள் மீது கவனம் செலுத்தாமல் அமைச்சு செயலாளரின் 2017 பெப்ரவரி 21 ஆம் திகதி ஈடீ/01/14/05/02 இலக்கங் கொண்ட கடிதத்தின் மூலம் அந்த பாடத் திட்டங்களை மீண்டும் கவனம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2017 நவம்பர் 14 ஆம் திகதி மீண்டும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 மே மாதத்தில் தரம் 12 இன் கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னர் ரூபா 3,655,207 தொகை செலவிடப்பட்டு 3457 தொகை 2017 ஆசிரியர்கள் மே மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் போது பயிற்றப்பற்றிருந்த காரணத்தினால் அந்த திருத்தங்கள் தொடர்பாக அறிந்திருந்தனரா என்பது சிக்கல் தன்மையுடன் காணப்பட்டது. மேலும் திருத்தத்தின் மூலம் உள்ளடக்கம் மாற்றமடைந்திருக்காமையால் அதற்காக செலவிடப்பட்ட காலம் மற்றும் செலவிடப்பட்ட ரூபா 354,450 இற்கான செலவு பலனுள்ளதா என்பது சிக்கலாக இருந்ததுடன் பாடத்திட்டம் தாமதமின்றி தயாரித்து ஆசிரியர்களை அறிவுறுத்துவதற்காக மற்றும் சரியான பாடத்திட்டத்தை கற்பிப்பதற்கு தாமதமின்றி தயாரித்து சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுத்தல் நடைபெற வேண்டிய அத்தியவசியமான விடயங்கள் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(iii) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பாடம் மற்றும் பொது தகவல் தொழிநுட்ப பாடம்**

---

- கல்வி அமைச்சு செயலாளரின் 2012 பெப்ரவரி 14 ஆம் திகதிய ஈடி/01/26/19/01/02 கொண்ட கடிதத்தின் பிரகாரம் தரம் 6 முதல் 9 வரை தரம்களுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் பாடத்தை புதிதாக உள்வாங்குவதற்காக பிரேரரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த பாடத்திற்காக புதிய பாடத்திட்ட அலகு ஒன்றிக்கு இணையப்பொருட்கள் (IOT Intrnet of Thing) என உட்படுத்தியிருந்த போதிலும் முதற்தடவையாக இந்த பாடத்தை கற்கும் மாணவர்களுக்காக இந்த அலகு கற்பித்தல் பொருத்தமில்லை எனவும், மாணவர்களில் மட்டத்தின் படி அந்த பாட அலகு மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதினால் அதன் பிரகாரம் பாடத்திட்டம் மாற்றப்பட வேண்டுமெனவும் 2017 ஜனவரி மாதத்தில் கலைத் திட்ட சபை அறிவித்திருந்தது. எவ்வாறாயினும் இந்த பாடத்திட்டத்தை திருத்தி அங்கீகரித்து 2017 ஆண்டு இறுதி வரை தாமதித்ததன் காரணமாக குறிப்பிட்ட பாடப் புத்தகங்களை தயாரித்தல் அல்லது பாடத்தை கற்பிப்பதற்காக ஆசிரியர்களை பயிற்றுவித்தல் 2018 ஜனவரி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- தரம் 12 இற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பாடம் மற்றும் உயர்தரத்திற்காக பொது தகவல் தொழிநுட்பப் பாடத்திட்டம் தயாரித்தல் செயலமர்வுகள் நடாத்துதல் 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 மார்ச் மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 2016 திசெம்பர் முதல் 2017 பெப்ரவரி 16 வரை பாடத்திட்டத்தின் இறுதி வரைவு தயாரிப்பதற்காக செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் IOT பாட அலகு பாடசாலை பாடத்திட்டங்களுக்கு பொருத்தமற்றவை என 2017 மார்ச் 07 ஆம் திகதிய 366 ஆம் இலக்க கலைத்திட்ட மன்ற தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத் தீர்மானம் தொடர்பாக கவனம் செலுத்தாமல் அந்த அலகை உட்படுத்தி 2017 ஏப்ரல் 20 திகதிய 413 ஆம் இலக்க நிருவாக சபையின் தீர்மானத்தின் பிரகாரம் பாடத்திட்டத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

- தரம் 13 இற்கான பாடத்திட்டத்திற்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட கணினி செயற்திட்டம் மற்றும் கணினி மொழி தொடர்பாக விதப்புரை பெறுவதற்காக மீண்டும் ஒரு முறை 2017 திசெம்பர் 05 திகதி நடைபெற்ற 376 ஆம் இலக்க கலைத்திட்ட சபையின் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மற்றும் விரிவுரையானர் மூவரை கொண்ட மூவர் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. பாடசாலை முறைமையின் க.பொ.த.(உயர்தர) கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகாரம் கிடைத்திருந்த இப் பாடத்திட்டத்திற்காக மேலும் திருத்தங்கள் சேர்துக்கொள்ளப்பட்டு காணப்பட்டமையால் 2019 ஆண்டின் போது க.பொ.த.(உயர்தர) பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு சிக்கல் தன்மையுள்ள நிலைமையொன்றிற்கு முகங்கொடுக்க நேரிடும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(iv) சமயங்கள் தொடர்பான பாடத்திட்டங்கள் தயாரித்தல்**

---

ஒவ்வொரு சமயத்திற்குமாக பௌத்த சமயம், பௌத்த நாகரிகம் , கிருஸ்தவ, கத்தோலிக்க நாகரிகம் ஆகிய பாடத்திட்டங்கள் தயாரித்தல், செயலமர்வுகள் நடாத்துதல், மொழி பெயர்த்தல், அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் ஆசிரிய கைநூல்கள் தயாரித்தல் ஆகிய அனைதது அலுவல்களும் ஒரே உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக

தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்களில் பிழையற்ற தன்மை தொடர்பாக சிக்கல் நிலைமை ஒன்று ஏற்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(v) தொடர்பாடல் மற்றும் ஊடாக கல்விற்கான புதிய பாடத்திட்டம்**

2017 ஆகஸ்ட் 17 திகதிய 417 ஆம் இலக்க நிருவாக சபை தீர்மானத்தின் பிரகாரம் தரம் 12 இற்கான தொடர்பாடல் மற்றும் ஊடக கல்விப் பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் கைநூல் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த பாடத் திட்டம் 2017/2018 ஆண்டுகளின் போது செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அளவை மட்டம் (Level of Bench marking) தொடர்பாக கலைத்திட்ட சபையின் கருத்துரையின் பிரகாரம் 2008 ஆண்டின் போது அறிமுகப்படுத்தியிருந்த பழைய பாடத்திட்டமே 2019 ஆண்டிற்காக உயர்தர பரீட்சையின் போது செயற்படுத்துவதற்கு சுற்றறிக்கை ஒன்று வெளியிடுமாறு நிறுவனத்தின் பெண் பணிப்பாளர் நாயகத்தினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அதற்காக சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்காததுடன் 2019 உயர்தரத்திற்காக தோற்றும் மாணவர்களுக்கு கற்பித்தல் அலுவல்கள் ஆரம்பிக்க வேண்டியது எந்த பாடத்திட்டத்தின் பிரகாரம் என பாடசாலைகளை அறிவித்திருந்ததற்கான சான்றுகளும் அவதானிக்கப்படாமையால் அது 2019 உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு நிகழும் அநியாயம் ஒன்று என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) ஆசிரியர் பயிற்சிகள் ஆரம்பித்தலில் தாமதம் மற்றும் ஆசிரியர் பயிற்சி ஏற்பாடு செய்வதில் முறைசாராமையும்**

2017 ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப மற்றும் பொது தகவல் தொழிநுட்ப பாடத்திட்டம் 2017 மே மாதத்தில் பாடசாலை முறைமையில் கற்பித்தல் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அது வரையும் ஆசிரியர் பயிற்சி வழங்கல் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் பயிற்சி வழங்கப்பட வேண்டிய 2223 ஆசிரியர்களில் பாடசாலை முறைமையில் இந்தப் பாடம் ஆரம்பிக்கப்பட்டு 03 மாதங்களுக்குப் பின்னர் 1023 பேர் மாத்திரம் பயிற்றப்பட்டிருந்தனர். மேலும் மாகாணம் மற்றும் வலயங்களினால் பயிற்சி வழங்க வேண்டிய தேவையான ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்காமல் இணைய தளத்தில் ஊடாக விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதன் காரணமாக இணைய தள வசதிகள் மற்றும் கணினி வசதிகள் இன்றிய ஆசிரியர்கள் அறிந்திருக்காமை மற்றும் இலங்கையில் குறைந்த வசதிகளை உடைய பாடசாலைகளில் இந்த பாடங்கள் தொடர்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கள் பெற்றுக்கொள்வதற்கு முடியாமை அந்த மாணவர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்டுகின்ற அநியாயம் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) பரீட்சைகள் நடாத்துதல் மற்றும் நிருவாகம்**

(i) 2010/2011 கல்விமானி இறுதிப் பரீட்சையின் போது ஏற்பட்டுள்ள பரீட்சை மோசடி தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கையின் விதப்புரைகள் செயற்படுத்துவதற்காக 2013 ஜுன் 28 திகதிய 4050 ஆம் இலக்க தாபனம் சார் சபை தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பரீட்சை வினாத்தாள்கள் தயாரித்தல் மற்றும் விடைத்தாள்கள் பரிசோதனை செய்யும் கருமங்களில் பாடநெறி கூட்டிணைப்பாளர்கள் விரிவுரையாளர்களை விடுவிக்கும் படி மற்றும் அவ் விடயங்கள் நிறுவனத்தின் மற்றும் சமமான வேறு கல்வியியல் கல்லூரியில் கடமையாற்றும் தகைமை உடைய நபர்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளும் படி குறிப்பிட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே 31 திகதி வரையும் வினாத்தாள்கள் தயாரித்தல்

மற்றும் விடைத்தாள்கள் திருத்துதல் பாடநெறி விரிவுரையாளர் களினாலேயே செய்யப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக பரீட்சைகளின் இரகசியத் தன்மை மற்றும் வெளிப்படையான தன்மை தொடர்பாக சிக்கல் நிலைமையொன்று உருவாகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) நிறுவகத்தினால் பரீட்சைகள் நடாத்தல் தொடர்பாக வெளியிட்டுள்ள 2000 திசெம்பர் 31 திகதிய வரைவு பரீட்சை அறிவுரை கோவையில் குறைபாடுகள் காணப்பட்டமையால் மிகவும் சரியான மற்றும் வலுவான பரீட்சை அறிவுரை கோவையொன்று தயாரிக்கும்படி மேற்கூறிய விசாரணை அறிக்கையின் மூலம் வழங்கியிருந்த விதப்புரை தாபனம் சார் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் முறையான பரீட்சை அறிவுரை கோவையொன்று தயாரிப்பதற்கு 2013 அண்டு முதல் இது வரை 18 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியாகிய 2018 மே 31 திகதி வரை அதனை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் இரகசியத் தன்மை மற்றும் நம்பிக்கை தன்மையை பாதுகாக்கக் கூடிய விதமாக பரீட்சை ஒழுங்கமைப்பு, வினாத்தாள்கள் தயாரித்தல், விடைத்தாள் மதிப்பாய்வு செய்தல் பரீட்சை நிருவாகம் முறையான சட்டம்சார் சட்டகமொன்றின் பிரகாரம் நடைபெறாமையினால் பரீட்சை மோசடிகள் மற்றும் பரீட்சை சட்ட மீறல்கள் ஏற்பட இடமிருப்பதால் அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியாது நிலைமை ஒன்றும் உருவாகின்றது என அவதானிக்கப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டவாறு 04 பரீட்சைகள் நடாத்தி இருக்காததுடன் 2017 ஆண்டின் போது நடாத்தப்பட்ட 19 பரீட்சைகளில் 08 பரீட்சைகளின் பெறுபேறுகள் 2018 ஏப்ரல் மாதம் வரை வழங்கியிருக்கவில்லை. மேலும், 2015/2106 ஆண்டுகளின் போது நடாத்தப்பட்ட 08 பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடுவதற்கு ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்தது.

**(ஈ) கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக தரவு முறைமையொன்று பேணுதல்**

---

நிறுவனத்தினால் நடாத்தப்பட்டு வரும் பட்ட மற்றும் டிப்ளோமா பூர்த்தி செய்யப்பட்தற்கான தகவல்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய மையப்படுத்தப்பட்ட தரவு முறைமையொன்று செயற்படுத்தியிருக்காததுடன் பல்வேறு பட்ட மற்றும் பாடநெறிகளுக்காக பதிவு செய்திருந்த ஆசிரிய மாணவர்கள் அந்த பாடநெறிகளை பூர்த்தி செய்தல், மீண்டும் பரீட்சைகளுக்கு தோற்றுவது மூலம் பாடநெறிகளை பூர்த்தி செய்ததற்கான தகவல்களும் ஆசிரிய கல்வி நிறுவகத்தில் காணப்படவில்லை.

**(உ) ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்**

---

(i) தேசிய இனமக்களுக்கு பண்புசார் கல்வி ஒன்றினை வழங்கும் குறிக்கோளுடன் செயற்படுத்தும் பாடவிதான அபிவிருத்தி மற்றும் தொழில்சார் அபிவிருத்தி மற்றும் தொடர்புடைய எதிர்கால அபிவிருத்திசார் அலுவல்களுக்காக கொள்கைசார் விதமாக தீர்மானம் எடுப்பதற்கு ஏதுவாகும் ஆய்வு கல்வி மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான ஆய்வுகள் நடாத்தியிருக்காததுடன் 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட 7 ஆய்வுகளில் 06 இனதும் மதிப்பாய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பாடவிதானங்களை செயற்படுத்தும் திட்டத்தின் பிரகாரம், 8 வருடங்களுக்கு ஒரு முறை மாற்றங்கள் மற்றும் அபிவிருத்திகள் மேற்கொள்வதற்கு முன்னர், நடைமுறையிலுள்ள பாடவிதானங்களை பாடசாலை முறைமையில் செயற்படுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், பல்வேறு சமூக குழுக்களினால் சுட்டிக்காட்டிய கருத்துரைகள் மற்றும் ஒவ்வொரு பாடப் பரப்புகளில் சேர்ந்துள்ள புதிய அறிவுகள் மற்றும் கற்றல் நடைமுறைகள் தொடர்பாக பயனுள்ள ஆய்வுகள் நிறுவகத்தின் ஒவ்வொரு திணைக்களத்திற்கும் வழங்குதல் மற்றும் நடப்பு கல்வி ஆய்வு தலைப்புகளை தெரிவு செய்து ஆய்வுகள் மேற்கொள்ளல் மற்றும் அந்த ஆய்வுகள் தொடர்பாக குறிப்பிட்ட காலப்பகுதியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) ஆசிரிய கைநூல் தாமதமாக அச்சிடுதல்**

2012 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான பாடவிதானத்தை செயற்படுத்தும் திட்டத்தின் பிரகாரம், 11 மற்றும் 12 தரங்களுக்காக முறையே 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது புதிய பாடவிதானங்கள் செயற்படுத்த வேண்டியதுடன் அதனோடு தொடர்புடைய தயாரிக்கப்பட்டிருந்த பாடத்திட்டம் அடங்கிய ஆசிரிய கைநூல்கள் அந்தப் பாடம் கற்பித்தல் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆசிரியர்களுக்கு கிடைக்க செய்ய வேண்டும். எனினும் நிறுவனத்தினால் சில பாடங்கள் தொடர்பான பாடத்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் கைநூல்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரித்தல் மாத்திரம் 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 14 பாடங்கள் தொடர்பாக மென்பொருள் பிரதிகள் 2018 ஜனவரி 31 திகதி வரை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 2017 ஆண்டின் போது க.பொ.த.(உயர் தரம்) புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் கற்பித்தல் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனினும் ஆசிரியர் கைநூல்கள் ஆசிரியர்களுக்கு கிடைத்திருக்காமையால் முறைசார் கல்விக்கு பாதகங்கள் ஏற்படுகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(எ) உணவகம் மீதான பரிசோதனை**

நிறுவகத்தினால் 9 சமையல்காரர்களை கொண்ட உணவகம் ஒன்று நடாத்தப்படுவதுடன் 2017 ஆண்டின் போது அதன் வருமானம் ரூபா 8,375,309 தொகை மற்றும் மொத்த செலவுகள் ரூபா 14,365,423 அக காணப்பட்டது. உணவகத்தினால் உணவு வழங்குவது தொடர்பாக பெற்றிருந்த வருமானத்தை மிகைத்து ரூபா 5,990,114 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தினால் செலவுகள் மேற்கொண்டு உணவகம் ஒன்று நடாத்துவது ஆக்கபூர்வமற்றது என அவதானிக்கப்பட்டது. மேலும், உணவகத்தில் இருந்து கட்டளையிடப்பட்டிருந்த 17,897 காலை உணவு வேளைகளும் 33,774 பகல் உணவு வேளைகளும், 14,095 இரவு உணவு வேளைகளும் மறுக்கப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தினால் விண்ணப்பிக்கும் உணவுக் கட்டளைகளை வழங்குவதற்கு உணவகத்திற்கு முடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது

**4.4 நிதியக் குறைபயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிதத் திணைக்களத்தினால் வழங்கியிருந்த 10 ஆம் தர பயிற்சி வினாத்தாள் கோவையின் சிங்களம் மற்றும் தமிழ் மொழி பிரதிகள் 10,000 தொகை 11 ஆம் தர மீள்நோக்கு வினாத்தாள் கோவையில் ஆங்கில மொழிமூலம் 3,000 பிரதிகள் அச்சிடுவதற்கு 2016 ஆண்டின் போது ரூபா 3,787,500 தொகையொன்று அச்சு செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் இந்த புத்தகங்கள் ஏதும் அச்சிடப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பியிருக்கவில்லை.

(ஆ) ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலுவல்கள் நிதியத்தில் 2011 ஆண்டு முதல் ரூபா 8,750,000 தொகை காணப்பட்ட போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை இந்த நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) க.பொ.த.(உயர்தர) தெரிவு செய்யப்பட்ட பாடங்களுக்காக 6 மூலவள அடிப்படை புத்தகங்கள் தயாரிப்பதற்காக மற்றும் அச்சிடுவதற்காக 2014 ஆண்டின் போது அவுஸ்திரேலிய அரசின் வெளிநாட்டு மற்றும் வர்த்தக அலுவல்கள் திணைக்களத்தின் உதவியின் மூலம் (DFAT/AUSAID) ரூபா 15,400,000 இற்கான நிதிஏற்பாடு ஒன்று ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 04 வருட காலம் முடிவடைந்திருந்த போதிலும் அப் புத்தகங்கள் அச்சிட்டிருக்காத காரணத்தினால் மீளாய்வாண்டு வரை அந்த நிதியம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஈ) நிறுவனத்தின் குறிக்கோள் சார்ந்த கருமங்களில் ஈடுபடுத்தப்படாமல் நடைமுறை கணக்கு ஒன்றின் மீளாய்வாண்டின் ஜனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 36,934,387 முதல் ரூபா 313,682,200 வரையான வீச்சில் காசு மீதி தடுத்து வைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டன.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவனத்தினால் நடாத்தப்பட்டு வரும் பால் விற்பனை நிலையம் மற்றும் மீபே தலைமைத்துவ பயிற்சி அபிவிருத்தி நிலையத்தில் காணப்படும் உணவகம் ஆகியவற்றின் உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் பால் விற்பனை நிலையத்தின் மின்சாரக் கட்டணத்தை முற்றாகவும் உணவகத்தின் மின்சாரத் கட்டணத்தில் 50 சதவீதம் செலுத்தப்பட வேண்டும். எனினும் 2017 ஆண்டிற்கன உணவகம் மற்றும் பால் விற்பனை நிலையத்தின் மின்சாரக் கட்டணம் முறையே ரூபா 136,312 தொகை மற்றும் ரூபா 108,550 தொகை ஒப்பந்தக்காரர்களிடம் அறவீடு செய்திருக்கவில்லை.

**4.6 பதவியணி நிருவாகம்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 652 வும் உள்ளவாறான பதவியணி 452 ஆக காணப்பட்டதுடன் 200 வெற்றிடங்கள் காணப்பட்டமையால் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ஆண்டின் பின்னர் 2011 ஆண்டின் போது இறுதியாக பதவியணியினால் அங்கீகரித்திருந்ததுடன் அவை முறையே 646 மற்றும் 652 தொகை ஆகும். அதன் பிரகாரம் 2007 ஆண்டு முதல் 2018 ஆண்டு அளவில் நிறுவகத்தின் செய்பணிகள் பாரிய அளவில் விரிவடைந்திருந்த போதிலும் பதவியணியை திருத்தியிருக்காமையினால் அனேகமான பிரிவுகளில் வேலைகள் உச்ச அளவில் நிறைவேற்றிக்கொள்ள முடியாதுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவனத்தின் ஒரே கிளையில் 05 வருடங்கள் மற்றும் 26 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடமையாற்றியுள்ள உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் எண்ணிக்கை 69 ஆகக் காணப்பட்டதுடன் நிறுவனத்தில் உள்ளக இடமாற்றத்திற்கான முறையான நடைமுறை ஒன்றினை தயாரித்திருக்காமை நிறுவகத்தை உள்ளக நிருவாகத்திற்கு பிரதி கூலமாக தாக்குகின்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 ஆண்டின் பொது 28 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக செய்தித்தாள அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் 12 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைபெற்றிருக்கவில்லை.

(ஈ) நூலகத்திற்காக உத்தியோகத்தர்கள் 11 பேர் அங்கீகரித்திருந்ததுடன் 2018 அளவில் 05 உத்தியோகத்தர்கள் மாத்திரம் கடமையாற்றினர் என அவதானிக்கப்பட்டதுடன் பல வருட காலமாக நூலக பணிப்பாளர், உதவி நூலககர், நூலகர் உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஆகிய பதவிகள் வெற்றிடமாக காணப்படுவதால் 05 பிரிவுகளைக் கொண்ட நூலகத்தின் நாளாந்த அலுவல்களை நடாத்திச் செல்வதில் சிக்கல் தன்மை ஒன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(உ) நிறுவகத்தின் ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் நூலக உதவியாளர் III பதவிகளுக்காக அலுவலர்கள் சேர்க்கும் போது நூலக மற்றும் தகவல் அறிவியல் விஞ்ஞானம் தொடர்பான 03 வருட டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்திருக்க வேண்டும். அவ்வாறாயினும் சமமான வேறு நூலகங்களில் (உதா: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிருவகிக்கப்படும் பல்கலைக்கழகங்களை சேர்ந்த நூலகங்கள் மற்றும் கொழும்பு மாநகர சபை நூலகம்) அப் பதவிகளுக்காக நூலகம் மற்றும் அறிவியல் விஞ்ஞானம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியாக ஆரம்ப பரீட்சை சித்தியடைந்திருத்தல் போதிய தகைமையென கணிக்கப்படும் என அவதானிக்கப்பட்டதுடன் 2013 ஆண்டு முதல் நூலக உதவியாளர் பதவி வெற்றிடமாக காணப்படுவதற்கு இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்படும் பலவீனம் காரணமாக உள்ளது என அவதானிக்கப்பட்டது.

### 4.7 வாகனப் பயன்பாடு

பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 9.3.1 இன் பிரகாரம் வாகனங்கள் பழுதுபார்த்தல் உள்நாட்டு முகவர் ஒருவர் மூலம் மேற்கொள்ளும் போது அதன் பொருளாதார நலன்கள் வாகனத்தின் வயது மற்றும் தரம் என்பவற்றை கவனத்தில் எடுத்து கூறுவிலைகள் தொடர்பாக பெறுகை தொடர்பாக நிறுவனம் திருப்தி அடைய வேண்டும். எனினும் பெறுகைகள் குழுவினால் பொருளாதார நலன்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2017 ஆண்டின் போது 37 சந்தர்ப்பங்களில் ரூபா 3,838,823 இற்கான செலவு ஒன்று மேற்கொண்டு உள்நாட்டு முகவர்கள் மூலம் மாத்திரம் வாகனங்களின் பழுதுபார்த்தல் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 4.8 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது குறிப்பிட்ட பிரிவுகளின் கோரிக்கைகளின் மீது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,023,115 தொகை பெறுமதியுள்ள பண்டங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே 30 அளவிலும் அந்த பிரிவுகளுக்கு வினியோகிக்காமல் நிறுவகத்தின் பிரதான களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு ‘‘2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம்’’ அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் அது தொடர்பாக 2017 அக்தோபர் 03 ஆம் திகதிய 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தை அங்கீகரித்து சுற்றறிக்கையின் மூலம் அனைத்து நிறுவனங்களுக்கும் அறிவூட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நோக்கெல்லை கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அனைத்து அரச நிறுவனங்கள் அறிவூட்டப்பட வேண்டும். எனினும் தேசிய கல்வி நிறுவகம் இது தொடர்பாக அறிந்திருக்காமையினால் அக் கருமங்கள் தொடர்பாக நிலைபேறாக அபிவிருத்தி குறிக்கோள்கள் இலக்குகள் மற்றும் இலக்குகளை நெருங்குவதை அளவை செய்வதற்காக சுட்டிகளையும் இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 4,492,613 இற்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும ரூபா 2,113,200 தொகைக்கான விரிவுரை மண்டப கதிரைகள் மற்றும் மேசைகள் பெறுகைள் தொடர்பாக 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.4.10 பந்தியின் பிரகாரம் செயலாற்றுகை பாதுகாப்பு முறி பெற்றிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 789,400 தொகை பெறுமதியான வாயு சீராக்கல் இயந்திரம் கொள்வனவு செய்யும் பெறுகை தொடர்பாக விலைகூறல் அழைப்பு பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வழிகாட்டல் கோவையின் 6.2 இன் பிரகாரம் சந்தைவிலை ஒப்பிடு முறையை கடைபிடிக்கும் போது குறைந்த அளவு 07 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமெனினும் மேற்கூறிய பெறுகை தொடர்பாக கூறுவிலை அழைத்தல், வழங்குனர்களினால் விலைகூறல்கள் சமர்ப்பித்தல், விலைகூறல் திறத்தல் மற்றும் விலைகூறல் வழங்குதல் ஆகிய அனைத்து பெறுகை விடயங்களும் 2017 திசெம்பர் 28 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், பதிவு தபால் மூலம் கூறுவிலைகள் சமர்ப்பிக்கும் படி எழுத்துமூலம் அறிவித்திருந்த போதிலும் வழிகாட்டல் கோவையின் 6.3 பந்தி இணக்கமற்ற முறையில் 2017 திசெம்பர் 29 திகதி மின் அஞ்சல் மூலம் கூறுவிலை சமர்ப்பித்திருந்த விலைகூறல் ஒன்றினை மதிப்பாய்வு செய்யப்பட்டு அதனை வெற்றிகரமான விலைகோரல் என ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 6.2 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மூலதன ஏற்பாடுகள் ரூபா 301,800,000 தொகை எனினும் உள்ளவாறான மூலதனச் செலவுகள் ரூபா 118,948,846 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 182,851,154 இற்கான முரண்கள் காணப்பட்டதுடன் பாதிடப்பட்ட மீண்டுவரும் வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது 14 சதவீதம் முதல் 1,131 வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கக் கூடிய விதமாக கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) பாடத்திட்டங்கள் தயாரிப்பதில் தாமதம் மற்றும் முறைசார் விதமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.<br>(ii) பாடவிதான அபிவிருத்திகளுக்காக தீர்மானங்கள் எடுப்பதற்கு ஏதுவாக ஆய்வுகள் மேற்கொள்ளாமை.<br>(iii) பட்டம் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளுக்காக பதிவு செய்தல் மற்றும் பூர்த்தி செய்தல் தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய தரவு முறைமையொன்று பேணப்படாமை. |
| (இ) | பரீட்சை நிருவாகம் | முறைசாராத விதமாக பரீட்சைகள் நடாத்துதல் மற்றும் பரீட்சை அலுவல்கள் தொடர்பாக முறையான சட்ட சட்டகம் ஒன்று காணப்படாமை. |
| (ஈ) | பதவியணி முகாமைத்துவம் | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை, நீண்ட காலம் பதில் கடமை அடிப்படையில் நியமங்கள் வழங்கப்படல். |
| (உ) | பெறுகை செயற்பாடு | (i) பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை.<br>(ii) நிறுவன தரப்பினர் சார்பாக உடன்படிக்கைகளில் கையொப்பம் இடப்படாமை. |